அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன். (குறுக்கீடு)

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநில அரசு ஓர் அணையைக் கட்டத் திட்டமிட்டுள்ளது என்பதைப்பற்றி இந்த அவையில் பல முறை இந்தக் கூட்டத் தொடரில் பேசிவிட்டோம். இன்று காலையில்கூட இதுசம்பந்தமாக அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் ஆய்வு நடத்திவிட்டுத்தான் இந்த அவைக்கு நான் இப்போது வந்திருக்கிறேன். பாலாற்றின் குறுக்கே, ஆந்திர மாநில அரசு அணை கட்டுவதைத் தடுப்பதற்காக உடனடியாக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவராக நியமித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வணங்கி, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் சமூக நலம் குறித்த முப்பத்து மூன்றாவது அறிக்கையினையும், வனம் குறித்த முப்பத்து நான்காவது அறிக்கையினையும், எரிசக்தித் துறை குறித்த முப்பத்து ஐந்தாவது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால், முப்பத்து மூன்று முதல் முப்பத்து ஐந்து வரையிலான அறிக்கைகளை அச்சடித்து, பேரவைக்கு அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிபெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.